Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Impact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p587 TIRJTS-2026-0056
DOI: 10.63300/tamilmanam.v12i06.35

RESEARCH ARTICLE

யாப்பிலக்கண வளர்ச்சி நிலைகள் (தொல்காப்பியத்தை முன்வைத்து)

Developmental Stages of Tamil Prosody: With Special Reference to Tolkāppiyam

முனைவர் அ. இளையராஜா[1,*]

[1] உதவிப்பேராசிரியர் முதுகலைத் தமிழ்த்துறை சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேரணி, விழுப்புரம்.

***Corresponding author:** முனைவர் அ. இளையராஜா, raja1992ar@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 10 November 2026
Revised: 12 November 2026
Accepted: 15 November 2026

Article ID
TIRJTS-2026-0056

Peer review
Double-blind peer review

Keywords
Tolkappiyam
Tamil prosody
poetic sub-genres
Venpa
Asiriyappa
Vanjippa
Kalippa

ABSTRACT

Oral songs that emerged as expressions of the emotions of inner characters (akam figures) were systematized into rules by later grammarians, paving the way for Tamil prosody (yāppilakkaṇam) from the time of Tolkāppiyar to the emergence of poetic forms down to the present day. Sangam poems primarily feature four foundational poetic forms—Āciriyam, Vaṉci, Kali, and Paripāṭṭu. This abstract highlights that poetic meters such as Akavalpā, Veṇpā, and Kalippā evolved through distinct developmental stages, were refined over time, and attained both literary form and grammatical definition.

How to cite this article: முனைவர் அ. இளையராஜா (2026). யாப்பிலக்கண வளர்ச்சி நிலைகள் (தொல்காப்பியத்தை முன்வைத்து). *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 587. https://doi.org/10.63300/tamilmanam.v12i06.35
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

ஆய்வுச் சுருக்கம்

அக மாந்தர்களின் உணர்ச்சியின் வெளிப்பாடாக எழுந்த வாய்மொழிப் பாடல்களையே பிற்கால இலக்கணிகள் விதிமுறைகளுக்குட்படுத்தி யாப்பிலக்கணத்திற்கு வழிவகுத்தனர் என்பதை தொல்காப்பியர் காலந்தொட்டு இன்றுவரை பா வடிவங்களில் தோற்றம் பெற்றது எனலாம். இதனை, ‘சங்கப் பாடல்களில் ஆசிரியம், வஞ்சி, கலி, பரிபாட்டு என்ற நான்கு பாவடிவங்களே உள்ளன.

அகவற்பா, வெண்பா, கலிப்பா போன்றவை வெவ்வேறு படிநிலைகளாக பரிணமித்துச் செப்பனிடப்பட்டு இலக்கிய வடிவமும் இலக்கண வரையறையும் பெற்றவை என்பதை உணர்த்தும் வகையில் இவ்வாய்வுச்சுருக்கம் அமைந்துள்ளன.

திறவுச் சொற்கள்: தொல்காப்பியம், யாப்பு, பாவினம், வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா.

முன்னுரை

தமிழ் யாப்பிலக்கண வரலாறு தொல்காப்பியம் தொடங்கி இக்காலம் வரையிலான நூல்வளம் சான்றிலக்கியவளம், உரைவளம் போன்றவைகளைக் கொண்டு விளங்குவது யாப்பிலக்கணங்கள் செய்யுளுக்கு அடிப்படையாக அமையும் உறுப்புகளை வரையறுத்து இலக்கணங் கூறியப் பின்னர் அவ்வுறுப்புகளால் உருப்பெறும் பாக்களின் வரையறையையும் அவை அமைவதற்குரிய விதிகளையும் வரையறுத்தன. தொல்காப்பியச் செய்யுளியலில் தொல்காப்பியர் காலத்தில் வழங்கிவந்த இலக்கியங்களைக் கொண்டு அக்காலப் பாக்களின் அமைப்பு, வகைகள், பாடும் முறைப் போன்றவற்றை விரிவாக விளக்குகியது. தொல்காப்பியர் காலத்திற்குப் பின்பு எழுந்த இலக்கியங்களில் வழங்கி வந்த பாக்களின் நிலைகளைக் காக்கைப்பாடினியம் முதலான பின் நூல்கள் உணர்த்துகின்றன என்னும் படிநிலைகளை மையமாக கொண்டு இவ்வாய்வுக்கட்டுரை அமைகின்றன.

தொல்காப்பியரின் பாவகைக் கூற்றுக்கள்

அடிகளால் தொகுக்கப்படுவது பாவாகும். தொல்காப்பிய யாப்பியல் மரபு பாக்களை நான்காகப் பகுத்துக் கூறுகிறது. இதனை,

“ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென

நாலியற் றென்ப பாவகை விரியே”[1]

எனும் வழி உணரலாம். ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய நால்வகைப் பாக்கள் முதன்மை நிலையிலும், ஆசிரியப்பாவும் வெண்பாவும் இணைந்து உருக்கொள்ளும் மருட்பா அடுத்த நிலையிலும் கூறப்பட்டுள்ளது. முதன்மை நிலையில் கூறப்பட்டுள்ள நால்வகைப் பாக்களின் பெயாக்காரணத்தை,

“அகவல் என்பது ஆசிரிய யம்மே”

“அஃதான் றென்ப வெண்பா யாப்பே”

“துள்ளல் ஓசை கலியென மொழிப”

“தூங்கல் ஓசை வஞ்சியாகும்”[2]

எனவரும் நூற்பாக்களினால் அறியமுடிகிறது. இப்பெயர்கள் யாவும் பாக்களுக்குரிய ஓசையின் அடிப்படையில் வழங்கப்பட்டதை ஊகித்தறியலாம்.

பாக்களின் வைப்பு முறைக்கான காரணத்தை இளம்பூரணர், 'பதினேழ் நிலத்தினும் வருதலானும் இனிய ஓசைத்தாகலானும், ஆயிரம் வரை வரும் அடிப்பரப்பினாலும், ஆசிரியப்பாவை முற்கூறினார். அதன்பின் ஆசிரிய நடைத்தாக இறுதி ஆசிரியத்தான் இறுத்தலில் வஞ்சிப்பாக் கூறினார். இந்நிகாத்தன்றி அகவலோசையின் வேறுபட்ட ஓசைத்தாகலான் வெண்பாவினை அதன்பின் கூறினார். அதன்பின் வெண்சீர் பயின்று வருதலானும், வெண்பா உறுப்பாகி வருதலானும் கலிப்பாவினைக் கூறினார்"[3] என்றும், 'முன் தூக்கென்னும் உறுப்புக் கூறிய வழி ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா வென்று வேறு முறை கூறினார். உலக வழக்கிற்கும், செய்யுள் வழக்கிற்கும் உரிய ஆசிரியமும், வெண்பாவும் போலச் செய்யுட்குரிய கலியும் வஞ்சியும் சிறப்பிலவோ என்று ஐயுறாமைக்கு அவற்றிற்கு அவையுறவு உடைய என்றற்கும் என்க"[4] என்று கூறுவர்.

பாக்களுக்குரிய பாடுபொருளைத் தொல்காப்பியர், பல்காயனார் போன்ற இலக்கணிகள் வரையறைச் செய்துள்ளனர். என்பதை,

"அந்நிலை மருங்கின் அறம்முதலாகிய

மும்முதற் பொருட்கும் உரிய என்ப"[5]

"வாழ்த்தியல் வகையே நாற்பாக்கும் உரித்தே"[6]

எனும் நூற்பாக்களின் வழி அறியலாம். மேற்கூறப்பட்டவை நால்வகைப் பாக்களுக்கும் உரியன.

ஆசிரியப்பா

நால்வகைப் பாக்களுள் ஆசிரியப்பாவே எளிமையாக இயற்றக்கூடியதாகும். மாணவனுக்கு ஆசிரியர் தெளிவாக எடுத்து விளக்குவதுப் போல் ஆசிரியப்பா நடத்தலால் இப்பெயர்ப் பெற்றது என்பர். அடிவரையறை உள்ளப் பாட்டு யாப்பில் தொல்காப்பியம் ஆசிரியத்தையே முதன்மை நிலையில் வைத்து இலக்கணம் கூறுகிறது. ஆசிரியப்பாவின் அமைப்பு, எளிமை அதனைத் தொன்மையான பாவடிவம் என கருதும்படி செய்கிறது.

ஆசிரியப்பாவின் தொன்மைக் குறித்து, 'ஆசிரியம் என்பது பூர்விகப் பாடல்களின் வளர்ச்சியாய்த் தமிழ்ப் பாவகைகளின் மூலப்பாவாக அமைகின்றது என்று கூறலாம். சாதாரண மக்களின் பேச்சு வழக்கிலுள்ள மொழி நடையினையும், ஓசைப் பண்பினையும் கொண்ட பூர்வீகப் பாடல்களில் இருந்து வளர்ச்சியுற்ற ஆசிரியப்பாவிலும் இப்பண்புகள் செறிந்து காணப்படுகின்றன"[7] என்பார். மேலும் "ஆசிரியப்பாவின் ஈற்றயலடி முச்சீராய் வருவது, பாட்டு முடிவடையப்போவதை

முன்கூட்டியே அறிவிக்கும் வாய்மொழி இலக்கியத்தின் பண்பாகும்" என்று ஜே.ஆர்.மார் கூறுவார். இக்கூற்றுக்களில் காணப்படும் "பூர்விகப் பாடல்களின் வளர்ச்சி, வாய்மொழிப் பாடல்களின் பண்பு" என்ற தொடர்கள் இரண்டுமே ஒருபொருளுடையதாய் ஆசிரியப்பாவின் தொன்மையை விளக்கவதாக உள்ளது.

ஆசிரியப்பாவின் இலக்கணம்

தொல்காப்பியர் உறுப்பிலக்கணம் கூறும்போது ஆசிரியப்பாவின் இலக்கணம் உரைப்பார். நூற்பாக்களை வரிசைப்படுத்துகையில், "ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென" என வரும் நூற்பாக்களின் வழி ஆசிரியத்தை முதன்மை நிலையில் வைக்கிறார். யாப்பருங்கலம் தொல்காப்பியர் மூன்றாவதாக குறிப்பிட்ட வெண்பாவை முதன்மை நிலையில் வைத்து இலக்கணம் கூறுகிறது. இதனை,

"வெண்பா ஆசிரியம் கலியே வஞ்சியெனப்

பண்பாய்ந் துரைத்த பாநான் காகும்;"[8]

எனும் வழி உணரலாம்.

தொல்காப்பியம் ஆசிரியப்பாவின் வகைகளை தொகுத்துரைக்கவில்லை. ஆனால் பிற்காலத்தில் யாப்பருங்கலத்திற்கு உரை எழுதிய விருத்தியுரையாசிரியர்,

"அகவல் ஓசையோடு அளவடித்தாகியும்

இயற்சீர் பயின்றும் அயற்சீர் விரவியும்

தன்தளை தழுவியும் பிறதளை விரவியும்

நிரைநடுவாகிய வஞ்சிஉரிச்சீர் வாராது

அயற்பா அடிமயங்கியும் மயங்காதும்

ஐஞ்சீரடியால் அருகிவரும் என்றும்

நாலெழுத்து முதலாக இருபதின் எழுத்தின்

காலும் உயர்ந்த பதினேழ் நிலமும் பெற்ற

நாற்சீர் அடியால் நடைபெறும் என்று

சொல்லப்பட்ட ஆசிரியப்பா"[9]

என்று ஆசிரியப்பாவின் இலக்கணத்தைத் தொகுத்தளித்தார்.

ஆசிரியப்பாவினது சீர்கள்

ஆசிரியப்பாவில் இயற்சீரும், ஆசிரியவுரிச்சீரும் வருவது சிறப்பாகிறது. அதாவது ஆசிரியத்தளைப் பிறத்தற்குரிய இயற்சீர் பத்தும், ஆசிரிய உரிச்சீர் ஆறும் ஆசிரியப்பாவிற்கு உரியன. இதனை, 'ஆசிரிய உரிச்சீர் என்று தொல்காப்பியரால்

தெளிவாகச் சுட்டப்பெறுவன நேர்பு நேர்பு, நேர்பு நிரைபு, நிரைபு நேர்பு, நிரைபு நிரைபு என்னும் நான்கே ஆகும். உரியசையின் பின் நிரையிறுதி வரினும் ஆசிரிய உரிச்சீராக கொள்ளப்பெறும் என்றார் ஆதலின் நேர்பு நிரை, நிரை நிரைபு என்பனவும் அதன்பாற்படும்”[10] என ஆசிரியவுரிச்சீரினைத் தொகுத்துரைப்பார்.

ஆசிரியத்தளை பிறத்தற்குரிய பதினாறு சீர்களன்றி இனிய ஓசை பொருந்தி வருவதாயின் ஆசிரியப்பாவில் வெண்பாவுரிச்சீரும் வரும் என்பதனைத் தொல்காப்பியர்,

“இன்சீ ரியைய வருகுவ தாயின்

வெண்சீர் வரையார் ஆசிரிய அடிக்கே”[11]

என்றுரைப்பார். நேரீற்றாவாகிய மூவசைச்சீர் நான்கும் (வெண்பாவுரிச்சீர்) ஆசிரியப்பாவில் அனுமதிக்கப்படுதல் போல இனிய ஓசை பொருந்திவரின் வஞ்சியுரிச்சீரும் ஆசிரியப்பாவில் வரும் என்பார். வஞ்சியுரிச்சீர் அறுபதுள்ளும் மாசெல் சுரம், புலிசெல்சுரம், மாசெல் காடு, புலிசெல் காடு, மாசெல் கடறு, புலிசெல் கடறு, பாம்பு செல்வாய், பாம்புபடு வாய், களிறு செல்வாய், களிறுபடுவாய் என்னும் வஞ்சியுரிச்சீர்கள் பத்து மட்டுமே ஆசிரியப்பாவிலும், கலிப்பாவிலும் வரும் என யாப்பருங்கல விருத்தியுரையாசிரியா; வரையறைச் செய்வார்.

ஆசிரியப்பாவினது அடி

அடி என்பது பாட்டிற்கு இன்றியமையாதது. இவ்வடியானது கட்டளை அடி, சீர்வகை அடி என இருவகையினதாய் பாக்களில் பயிலும் என்பார். எழுத்தெண்ணி வகுக்கப்பெறும் குறளடி முதல் கழிநெடிலடி ஈறான கட்டளையடிகளாகிய ஐந்தடிகளும் ஆசிரியப்பாவிற்கு உரியவை என்பார் தொல்காப்பியர். இதனை,

“ஐவகை அடியும் ஆசிரியக் குரிய

விராஅய் வரினும் ஒரூஉ நிலையிலவே”[12]

எனும் வழி விளக்குவர். சீர்வகையடிகளைப் பற்றிக் கூறுகையில் “ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப” என்பதால் ஆசிரியப்பாவிற்கு ஐஞ்சீரடியும் உரியது என்பது புலனாகும். இதனை,

“வெண்டளை விரவியும் ஆசிரியம் விரவியும்

ஐஞ்சீர் அடியும் உளவென மொழிப”[13]

எனும் வழி விளக்கியுரைப்பார்.

ஆசிரியப்பாவிற்குரிய தளைகள்

இருவகை ஆசிரியத்தளையும் இப்பாவிற்குரியது. இயற்சீர் இயைந்து நேர் ஒன்றினாலும் அல்லது நிரை ஒன்றினாலும் ஆசிரியத்தளையென்று அறிதல் வேண்டும் என்பார் தொல்காப்பியர். ஆசிரியத்தளையும், இயற்சீர் வெண்டளையுமே ஆசிரியப்பாவில் மிகுதியாக வரும். இவையன்றி ஏனைய தளைவகைகளில் கலித்தளையும், வெண்சீர் வெண்டளையும் குறைந்த அளவிற்கு வரும். இதுகுறித்து பேராசிரியர், நச்சினார்க்கினியர், யாப்பருங்கல விருத்தியாசிரியர் கூறுவதாக அடிகளாசிரியர் குறிப்பிடுவதாவது, "இயற்சீர் பத்துள் முற்றிலும் இயலசையாலான ஆறு இயற்சீர்களை நிரையீற்று இயற்சீரைப் போலக் கொண்டு தளைக் கொள்ள வேண்டும்"[14] எனத் தொகுத்து உரைப்பார்.

நேரிசை ஆசிரியப்பா

"நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே"

"அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே"

"ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கின்

தோற்றம் முச்சீர்த் தாகும் என்ப"[15]

எனும் தொல்காப்பிய நூற்பாக்கள் பின்வந்தோர் கூறிய நேரிசை ஆசிரியப்பாவின் வித்து எனலாம்.

இணைக்குறள் ஆசிரியம்

தொல்காப்பிய இலக்கணப்படி இடையிடையே முச்சீரடி வருவது இணைக்குறளாசிரியப்பாவின் இலக்கணம். இவற்றுள் முச்சீரடி இடையில் வரும்போது தனித்து வருமா என்பனவற்றிற்கு விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. தொல்காப்பியர் கூறிய,

"ஈற்றய லடியே ஆசிரிய மருங்கின்

தோற்றம் முச்சீர் தாகும் என்ப"[16]

"இடையும் வரையார் தொடையுணர்வோரே"[17]

எனும் நூற்பாக்களே பிற்காலத்தில் இணைக்குறள் ஆசிரியப்பாவின் இலக்கணமானது. மேற்கூறப்பட்டவற்றுள் இரண்டாம் நூற்பா முச்சீரடி இடையிடையே அமையும் என்பதை உணாத்தி நிற்கிறது. இருப்பினும் இவ்விதி இடைக்காலத்தில் மாற்றம் பெற்று இருசீரடியும் வரும் என்றாகியது. இருசீரடி இடைவருவதை "சொற்சீரடி என களைக"[18] என்பார் பேராசிரியர். சங்க இலக்கியத்தில் இடம்பெறும் ஆசிரியப்பாக்களில் இருசீரடி வருதல் குறித்து, "எட்டுத்தொகை நூல்களில் புறநானூற்றில் 14 விழுக்காடும், பதிற்றுப்பத்தில் 17 விழுக்காடும் இருசீரடி வந்த ஆசிரியப்பாக்கள் ஆகும். இவை இரண்டும் புறப்பொருள் பற்றியவை.

அகப்பொருள் நுதலிய அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, குறுந்தொகை ஆகிய நூல்களில் ஒரு பாடலில் கூட இருசீரடி பயிலவில்லை. பத்துப்பாட்டில், பொருநராற்றுப்படையில் 18 விழுக்காடும், மதுரைக்காஞ்சியில் 24 விழுக்காடும், பட்டினப்பாலையில் 54 விழுக்காடும் இருசீரடி கொண்ட ஆசிரியப்பகுதிகள் ஆகும். ஏனைய ஏழு பாட்டுகளில் ஒன்றிலும் இருசீரடி வரவில்லை. ஆதலின் தொல்காப்பியர் காலத்திற்குப் பின் சிறிது சிறிதாக இணைக்குறளாசிரியப்பா வளர்வதாயிற்று. இப்புதுவரவினைக் கண்டு பிற்கால யாப்பியலார் இவ்வகை ஆசிரியப்பாவிற்கு இலக்கணம் வரைந்தனர் என்பர்."[19] இக்கூற்றிலிருந்து இவ்வகை ஆசிரியம் ஓரளவேனும் தொல்காப்பியர் காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும் என்பதை உணரலாம்.

காக்கைப்பாடினியம் முதலும் முடிவும் நாற்சீரடியாய் இடையே இருசீரடி நாற்சீரடி என்னும் இருவகை அடியும் வர அமைவது இணைக்குறள் ஆசிரியப்பா என்றுரைக்கும். இதனை,

"அளவடி அந்தமும் ஆதியும் ஆகிக்

குறளடி சிந்தடி என்றா இரண்டும்

இடைவர நிற்ப திணைக்குறள் ஆகும்"[20]

என்கிறது.

இக்காக்கைபாடினிய நூற்பாவில் சிந்தடிக்கு முன்பு குறளடி கூறப்பட்டிருப்பதாலும், இணைக்குறள் என்பதில் 'குறள்' என்பதும் இருசீரடியினைக் குறிப்பதாக கொண்டதாலும், இடைக்காலத்தில் தொல்காப்பிய இலக்கணமான முச்சீரடி வருதல் என்பது மாறுபட்டு இருசீரடி வருதல் முதன்மை பெற்றது. இம்மாற்றம் இந்நூற்றாண்டுவரை நிலைபெற்று வந்துள்ளது.

நிலைமண்டில ஆசிரியப்பா

ஆசிரியப்பாவிற்கு உரிய பொது இலக்கணத்தைப் பெற்று அனைத்து அடிகளும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாக ஒத்து அமைவது நிலைமண்டில ஆசிரியப்பா தொல்காப்பியர் பாவகைகளையும் பாடுபொருளையும் கூறியபின்பு,

"ஒத்தா ழிசையும் மண்டில யாப்பும்

குட்டமும் நேரடிக்கு ஒட்டின என்ப"[21]

எனும் நூற்பாவும்,

"மண்டிலம் குட்டம் என்றிவை இரண்டும்

செந்தூக் கியல என்மனார் புலவர்"[22]

எனும் நூற்பாவும் இடம்பெறுதலால் இவற்றில் உள்ள மண்டிலம் என்பதனை இருவகை மண்டில யாப்பான நிலைமண்டிலத்தையும், அடிமறிமண்டிலத்தையும் குறிப்பதாக இளம்பூரணர் குறிப்பிடுவார்.

அடிமறிமண்டிலம்

அடிமறித்துக்கொள்ளினும் பொருள் திரியாது நிற்றல் அடிமறிமண்டிலம் என இப்பாவின் பொருண்மையைப் பேராசிரியர் சுட்டுவர். நிலை மண்டிலத்தினைப் போலவே அடிமறிமண்டிலமும் எல்லா அடிகளும் அளவொத்து வருவனவாகும். தொல்காப்பியர் சொல்லதிகாரத்தில்,

“அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து

சீர்நிலை திரியாது தடுமா றும்மே”[23]

எனும் வழி அடிமறி மொழிமாற்றுப் பொருள்கோள் குறித்து குறிப்பிடுவார். இப்பொருள்கோள் வகையையே இளம்பூரணர் அடிமறிமண்டில ஆசிரியப்பாவாக கொண்டார். இதனை இதற்கிலக்கணம் சொல்லதிகாரத்துள், நிரனிறை சுண்ணம் என்னும் சூத்திரத்தாற் கொள்க என்பார். மேலும் உதாரணப்பாடலாக,

“சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரலை எனினேயான்அஞ் சுவலே

சாரல் நாட நீரை லாறே”

என்பதைக் கூறி இதனுள் யாதானும் ஓரடியை முதலும் முடிவுமாக உச்சரித்தாலும் பொருள் வழுவாது ஓசையும் வழுவாது வருதலால் அடிமறியாயிற்று எனக் கூறுவர்.

வஞ்சிப்பா

சங்க இலக்கியங்களில் ஆசிரியப்பா பெருவழக்காகவும் தனிப்பட்ட வஞ்சிப்பாக்கள் அருகியும் புலவர்களினால் பாடப்பட்டுள்ளது. தொல்காப்பியர் தம் காலத்தில் வழங்கிவந்த பாக்களை குறிப்பிடுகையில் அவற்றுள் வஞ்சிப்பாவினையும் சுட்டுவார்.

தொல்காப்பியர் இப்பாவின் இலக்கணத்தினை மூவசைச்சீர் அறுபத்து நான்கில் நேர் ஈறாகிய நான்கு சீரும் வெண்பாவிற்குரியது. ஆதலால் அவை நீங்க வரும் அறுபது சீரும் வஞ்சி உரிச்சீர் என்பதை,

“வஞ்சிச் சீரென வகைபெற்றனவே

வெண்சீ ரல்லா மூவசை யென்ப”[24]

எனும் வழியும், இவை வஞ்சிப்பாவில் மட்டுமே வரும் என்பதை,

“தன்பா அல்வழித் தானடை வின்றே”[25]

எனும் வழியும் விளக்கி உரைப்பார்.

மேலும் வஞ்சிப்பாவில் பிறசீர்கள் வரப்பெறும் என்றும் நேரிற்று இயற்சீர்கள் வஞ்சிப்பின் இறுதியில் நில்லாது என்பதும் சுட்டப்பட்டுள்ளது.

வஞ்சிப்பாவின் சிற்றெல்லை மூன்று, பேரெல்லை ஆறு ஆகும். இரு சீராக வரும் வஞ்சியடியில் அசை கூனாக அமையும் என்பன யாவும் தொல்காப்பியரால் சுட்டப்படுவன.

காக்கைப்பாடினியம் இப்பாவின் இலக்கணத்தை வஞ்சித்தளை, அடி, தனிச்சொல், சுரிதகம் என்னும் நான்கும் முறையே தூங்கிசையால் நடப்பது என இலக்கணம் வகுக்கும். யாப்பருங்கலம் தனிச்சொல் பெற்று அகவலினால் முடியும் என்றுரைக்கும். யாப்பருங்கலக்காரிகை,

“தனிச்சொல் வந்து

மறைதல்இல் வாரத்தினால் இறும்வஞ்சி”[26]

எனும் வழி வஞ்சிப்பா ஆசிரிய சுரிதகத்தைப் பெற்று முடிதலைக் குறிக்கும். இவை நீங்கலாக இலக்கண விளக்கம் தொடங்கி யாப்பரங்கம் ஈறாக அனைத்து இலக்கண நூல்களும் காரிகையின் இலக்கணத்தையே பின்பற்றுகிறது. மேற்கூறப்பட்ட நூல்கள் யாவுமே வஞ்சிப்பா சுரிதகம் பெற்றுமுடியும் என்று பொதுமையில் குறிப்பிட மயேச்சுரம் ஆசிரிய சுரிதகத்தால் முடியும் என்பதை,

“தூங்கல் ஓசை நீங்கா தாகி

நாற்சீர் நிரம்பா அடியிரண் டுடைத்தாய்

மேற்சீர் ஓதிய ஐஞ்சீர் பெற்றச்

சுரிதகம் ஆசிரியம் உரியதனின் அடுத்து

வந்த தாயின் வஞ்சிப் பாவே”[27]

எனும் வழி விளக்குகிறது.

அனைத்து இலக்கண நூல்களுமே மாறுபாடு இல்லாது ஏற்றுக் கொண்ட வஞ்சிப்பாவின் இலக்கணத்துள் தூங்கலோசை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியர் இப்பாவிற்குரிய ஓசை தூங்கலோசை என்று மட்டுமே குறிப்பிட பின்வந்தோர் ஒன்றிய வஞ்சித்தளையினால் வருவது ஏந்திசை தூங்கல், ஒன்றா வஞ்சித்தளையுடன் ஏனைய பாக்களுக்குரிய தளைகள் விரவி வருவது பிரிந்திசை தூங்கல் என்னும் வகைகளையும் குறிப்பிடுவர். இதனை முத்துவீரியம்,

“தூங்கல் ஏந்திசை பிரிந்திசை அகவல்

ஆகும் என்மனார் அறிந்திசினோரே”[28]

எனும் வழியும் இதன் தொடர் நூற்பாக்கள் 56, 57, 58 என்பதிலிருந்தும் அறியலாம்.

வெண்பா

வெண்டளைப் பிழையாமல் வெண்சீரும் இயற்சீரும் வந்து நாள், மலர், காசு பிறப்பு என்னும் வாய்ப்பாட்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டு இறுதிச் சீர் அமைத்து ஏனைய அடிகள் நாற்சீராகவும் ஈற்றடி முச்சீராக அமையப் பெறுவது வெண்பாவாகும். இப்பாவகை அறம், பொருள், இன்பம் என்னும் மூவகை உறுதிப் பொருள், வாழ்த்தியல் வகை, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, அவையடக்கியல், செவியறிவுறுஉப் போன்ற பொருண்மைகளைத் குறித்து வெண்பாவாக யாக்கப்படுவது அகவலோசை அன்று என்பார். இதனை பின்வந்த இலக்கண நூலார் செப்பலோசை என்பார். ஆசிரியப்பாவும், வஞ்சிப்பாவும் நடைப்பொதுமை வாய்ந்தவை போல வெண்பாவும் கலிப்பாவும் ஒத்த நடைத் திறன் கொண்டவை.

தொல்காப்பியர் வெண்பாவின் ஈற்றயற்சீர் குறித்து குறிப்பிடுகையில் நேர்பு, நிரைபு அசைகளையும் ஏற்று அவற்றுள் இயற்சீர் மட்டுமே வெண்பாவில் வரக்கூடியது என்றும் சுட்டுவார். இதனை,

“நேரிற்று இயற்சீர் நிரையும் நிரைபும்

சீரேற்று இறூஉம் இயற்கைய என்ப”

எனும் வழியும்,

“நிரையவன் நிற்ப நேரும் நோபும்

வரைவின்றி என்ப வாய்மொழி புலவர்”[29]

எனும் வழியும் குறிப்பிடுவார். மேலும் அவர் காய்ச்சீர் வருவது குறித்து ஏதும் சுட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கியத்துள் கலித்தொகையில் கொச்சகமாக வந்துள்ள வெண்பாக்கள், புறப்பொருள் வெண்பாமாலையின் பாக்கள் ஆகியவற்றை நோக்குங்கால் வெண்பாவின் ஈற்றயற்சீர் காய்ச்சீராகவே இருந்திருக்கும் என்றும் பின் காய்ச்சீராக வருதல் அதிகமாக இயற்சீராக இருப்பதே சிறப்புடையது என மாற்றமடைந்திருக்கம் என உணர முடிகிறது. பிற்காலத்தார் ஈற்றயற்சீர் குறித்து ஏதும் கூறவில்லை என்றாலும், வெண்டளை பிழையாமை வேண்டும் என்றதனால் காய்ச்சீராக வருதலை ஏற்றனா; எனலாம்.

காக்கைப்பாடினியம் வெண்பாவின் இலக்கணத்தை,

“சிறந்துயர் செப்பல் இசையன வாகி

அறைந்த உறுப்பின் அகறல் இன்றி

விளங்கக் கிடப்பது வெண்பா ஆகும்”

“சிந்தடியானே இறுதலும் அவ்வடி

அந்தம் அசைச்சீர் வருதலும் யாப்புற

வந்தது வெள்ளை வழக்கியல் தானே”[30]

எனத் தொகுத்துரைக்க பின்னூல்கள் பலவும் இதையே வழிமொழிந்தன.

தொகுப்புரை

தொல்காப்பியத்தில் நேரிசை, இணைகுறள் என்ற ஆசிரியப்பாவின் வடிவங்கள் மட்டுமே கூறப்பட்டுள்ளது. பின்வந்த நூல்களே ஆசிரியப்பாவினை நால்வகைப்படுத்தின. எனினும் விருத்தியுரை அகவல் ஓசை அடிப்படையிலும் பொருண்மை அடிப்படையிலும் அகப்பா அகவல், புறப்பா அகவல், நூற்பா அகவல், சித்திர அகவல், உறுப்பின் அகவல், ஏந்திசை அகவல் என அறுவகை அகவல்கள் குறித்துச் சுட்டுகிறது. மேலும் நூற்பா அகவல் குறித்து முதன் முதலில் விருத்தியுரையே சுட்டுகிறது.

சான்றெண் விளக்கம்

1. தொல்.செய். நூ. 104.
2. மேலது., நூ. 82-85.
3. தொல்.செய்.இளம்.உரை. நூ. 101.
4. மேலது.,இளம்.உரை. நூ. 107.
5. தொல்.செய். நூ. 105.
6. மேலது., நூ. 108.
7. அ. சண்முகதாஸ், தமிழ் பா வடிவங்கள், ப. 37.
8. யாப்பருங்கலம், நூ. 55.
9. யாப்பருங்கல விருத்தியுரை, ப.
10. சோ.ந. கந்தசாமி, தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், முதல் பாகம், ப. 304.
11. தொல்.செய். நூ. 32.
12. மேலது., நூ. 53.
13. மேலது., நூ. 63.
14. அடிகளாசிரியர், செய்யுளியல் ஆராய்ச்சி, ப. 33.
15. தொல்.செய். நூ. 32, 35, 68.
16. தொல்.செய். நூ. 68.
17. மேலது., நூ. 69.
18. தொல்.பொருள்.செய்.பேரா.உரை. நூ. 69.

19. Advanced Studies in Tamil Prosody, pp. 48-52.
20. காக்கைப்பாடினியம், நூ. 62.
21. தொல்.செய். நூ. 115.
22. மேலது., நூ. 117.
23. தொல்.சொல்.எச்ச. நூ. 11.
24. தொல்.செய். நூ. 22.
25. மேலது., நூ. 23.
26. யாப்பருங்கல காரிகை, நூ. 46.
27. யாப்பருங்கல விருத்தியுரை, நூ. 376.
28. முத்துவீரியம், யாப். நூ. 55.
29. தொல்.செய். நூ. 74-75.
30. காக்கைப்பாடினியம், நூ. 46-47.

துணைநின்ற நூல்கள்

References

அமிதசாகரர், யாப்பருங்கலக்காரிகை மூலமும், குணசாகரர் இயற்றிய உரையும், ந.மு.வேங்கடசாமி நாட்டார் (பதி.), கழகம், மறுபதிப்பு-1971.

அமிதசாகரனார், யாப்பருங்கலம் பழைய, விருத்தியுரையுடன்,

இரா. இளங்குமரன் (ப.ஆ.), கழகம், சென்னை, பதிப்பு-1973.

தொல்காப்பியர், தொல்காப்பியம் பொருளதிகாரம், இளம்பூரணர் உரையுடன், கழகம், சென்னை, மறுபதிப்பு-1977.